**நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் 2009 குறித்து அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களுக்கு பின்வரும் தேர்தல் நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது.**

....

1. பொது நெறிமுறைகள்.

1. எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ வெவ்வேறு சாதி மதம் மொழியினரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.

2. வேறு அரசியல் கட்சியினரின் பிரமுகர்கள் / தொண்டர்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றியோ பொது நடைமுறைக்கு ஒவ்வாத விவகாரங்களையோ எடுத்துரைத்து பேசுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

மற்ற அரசியல் கட்சியின் தலைவர்கள், தொண்டர்களைப் பற்றி செய்திகளை சரிவர சரிபார்க்காமல் குறை கூறி பேசுவதை தவிர்க்க வேண்டும்.

3. சாதி, இன மத அடிப்படையில் வாக்கு சேகரிக்கக் கூடாது.

மசூதிகள், சர்ச்சுகள், கோவில்கள் பிற வழிபாட்டு தலங்களை தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

4. அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவிதமான நேர்மையற்ற நடவடிக்கையிலும், தேர்தல் விதிகளின்படி குற்றம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ள கீழ்காணும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது.

அதாவது வாக்காளர்களுக்கு கையூட்டு கொடுப்பது, வாக்காளர்களை அச்சுறுத்துதல், வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டருக்குள் பிரச்சாரம் செய்வது வாக்குப்பதிவுக்கு 48 மணி நேரத்திற்குள் பொதுக் கூட்டங்கள் நடத்துவது, வாக்குச் சாவடிக்கு வாக்காளர்களை வண்டி வாகனங்களில் அழைத்துச் செல்வது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

5. தனிப்பட்ட நபரின் அமைதியான வாழ்க்கையை மதிக்க வேண்டும். தனிப்பட்ட நபரின் கருத்துக்கு எதிராக அவரது வீட்டின் முன்புமறியல் அல்லது போராட்டம் நடத்துவது, போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

6. மற்ற அரசியல் கட்சியினர் நடத்தும் கூட்டங்கள், ஊர்வலங்களில் தொந்தரவு செய்வதையோ, கூட்டத்தைக் கலைக்கும் செயலில் ஈடுபடுவதையோ அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும்.

மற்ற அரசியல் கட்சியினர் நடத்தும் பொதுக் கூட்டங்களில் வேறு கட்சியின் தொண்டர்கள் அல்லது அனுதாபிகள் எவரும் தொந்தரவு ஏற்படுத்துவதோ, எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ கேள்வி கேட்பது அல்லது துண்டு பிரசுரங்கள் கொடுப்பதோ கூடாது.

7. எந்த அரசியல் கட்சியும் அல்லது வேட்பாளரும் அவர்களது கட்சியினரை தனிப்பட்ட நபர்களின் கட்டிடங்களில் அவர்களது அனுமதியின்றி கொடி கட்டுதல், சுவர் விளம்பரம் எழுதுதல், நோட்டீஸ் ஒட்டுதல், வாகனங்களில் எழுதுதல் போன்ற செயல்கள் செய்வதை தடுக்க வேண்டும். நகராட்சிப் பகுதிகளில் கட்டிட உரிமையாளரின் அனுமதி பெற்றாலும் கூட சுவர் விளம்பரம் எழுதக் கூடாது.

முறையான அனுமதி பெற்று ஒரு அரசியல் கட்சி ஊர்வலம் நடத்தும் பகுதியிலும் மற்ற கட்சி ஊர்வலம் நடத்தக்கூடாது.

ஒரு கட்சி வைத்துள்ள போஸ்டரை மற்ற கட்சியின் தொண்டர்கள் அகற்றக் கூடாது.

**<u>2) கூட்டங்கள்.</u>**

1. அரசியல் கட்சி வேட்பாளர்கள் தாங்கள் நடத்தவுள்ள கூட்டத்தின் நாள், நேரம், ஆகிய விவரங்களை உள்ளூர் காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும். அதன் மூலம் காவல்துறையினர் போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பராமரிக்க ஏதுவாக இருக்கும்.

2. அரசியல் கட்சி வேட்பாளர்கள் கூட்டங்கள் நடத்த திட்டமிடுவதற்கு முன்னர் அவ்வாறு நடத்த உத்தேசித்துள்ள பகுதியில் தடையுத்தரவு ஏதாவது அமலில் உள்ளதா என்பதை முன்னதாக அறிந்து அதன்படி நடக்க வேண்டும். இதிலிருந்து விலக்களிக்க கோரும் பட்சத்தில் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும்.

3. கூட்டங்கள் நடத்த தேவையான ஒலி பெருக்கிகள் அல்லது பயன்படுத்த உள்ள வேறு வசதிகள் குறித்து முன்னதாகவே உரிய அனுமதி / உரிமம் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும்

4. பொதுக்கூட்டம் நடத்துவோர், தாங்கள் நடத்தும் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க அங்கு பணியில் உள்ள காவல்துறையினரை நாட வேண்டும். தாங்களாகவே அத்தகைய நபர்களுடன் பிரச்னையில் ஈடுபடக்கூடாது.

5. உள்ளூர் காவல் துறையினருக்கு கூட்டங்கள் குறித்து நேரம், நாள் ஆகிய விவரங்களை முன்கூட்டியே தெரிவித்து அனுமதி பெற வேண்டும்.

**3) ஊர்வலங்கள்**

1. ஊர்வலம் செல்ல தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஊர்வலங்கள் ஏற்பாடு செய்தவர்கள் அவ்வழியே செல்வதை தவிர்க்க வேண்டும்.

2. அரசியல் கட்சியினர் / வேட்பாளர்கள் நடத்தவுள்ள ஊர்வலம் நாள், நேரம் ஆகியவற்றை ஏற்கனவே நிர்ணயித்த திட்டத்திலிருந்து மாறுபடக்கூடாது. ஊர்வலம் நடத்துபவர்கள் காவல் துறையினர் உரிய ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்வதற்காக முன் தகவல் தெரிவிக்க வேண்டும்.

3. போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் ஊர்வலம் செல்லும் பாதையை அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. போக்குவரத்து விதிகள் கட்டுப்பாடுகள் கவனமாக கடைப்பிடிக்க வேண்டும்.

5. ஒலிபெருக்கி வைப்பதோ அல்லது பிறவகை பிரச்சார முறையோ கூட்டங்களில் பயன்படுத்தியிருப்பின் உரிய அதிகாரியிடம் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும்.

6. ஊர்வலம் மிக நீண்டதாக இருக்குமானால் சாலைகள் கூடும் இடங்கள் போக்குவரத்து நிறைந்த பகுதிகள் ஆகியவற்றிற்கு இடைஞ்சல் ஏற்படாமல் இருக்க ஊர்வலத்தை தொகுதி தொகுதியாக பிரித்து அனுப்ப வேண்டும்.

7. பல அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் ஒரே தேதி, நேரம் பாதையில் ஊர்வலம் நடத்த திட்டமிட்டு இருந்தால், பிரச்னை வராமல் இருக்க உள்ளூர் காவல்துறையினரை அணுகி அவர்களின் உதவியுடன் இடைஞ்சல் இன்றி ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

8. ஊர்வலங்கள் நடத்துவது குறித்து நாள், நேரம் பகுதி ஆகியவற்றை காவல்துறைக்கு தெரிவித்து முன்கூட்டி அனுமதி பெற வேண்டும்.

9. ஊர்வலம் நடத்த உத்தேசித்துள்ள பகுதியில் தடை உத்தரவு ஏதேனும் இருந்தால் அதனை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும். போக்குவரத்திற்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் ஊர்வலங்கள் நடத்த வேண்டும்.

10. உரிய அதிகார வரம்பின் கீழ் அனுமதி பெறாமல் பொதுகூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் ஒலி பெருக்கிகள் பயன்படுத்தக் கூடாது.

11. உரிய அனுமதி பெறாமல் காலை 6 மணிக்கு முன்பும், இரவு 10 மணிக்கு பின்பும் ஒலிபெருக்கிகளை பயன்படுத்தக்கூடாது.

12. ஊர்வலங்களின்போது தகாத செயல்கள் நிகழாமல் இருக்கும்பொருட்டு ஊர்வலக்காரர்கள் தங்களுடன் எந்த பொருட்களையும் எடுத்துச் செல்லாமல் அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

13. தனது கட்சியின் தொண்டர்கள் அரசியல் தலைவர்களின் உருவ பொம்மைகளை ஏந்தி செல்வதோ அல்லது அதனை வைப்பதோ அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் தவிர்க்க வேண்டும்.

14. பொதுவாக கூட்டங்கள் / ஊர்வலங்கள் இரவு 10.00 மணிக்கு பின்னர் அனுமதிக்கக் கூடாது. மேலும், அப்பகுதியின் உள்ளூர் சட்டநெறிமுறைகள் தட்பவெப்ப நிலை, திருவிழாக் காலங்கள், பள்ளித் தேர்வுகள் முதலிய விபரங்களின் அடிப்படையில் கூட்டங்கள்/ ஊர்வலங்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

15. கூட்டங்களின் போது இடைஞ்சல் செய்யும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்க உள்ளூர் காவல்துறையின் உதவியை பெற வேண்டும்.

**<u>4. தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களின் மீது விளம்பரம் செய்தல் / உரு அழித்தல்.</u>**

**<u>(1) பொது இடங்களில் விளம்பரம் செய்து உரு அழித்தல்</u>**

(அ) பொது இடங்களில் சுவர்களில் விளம்பரம் செய்தல் சுவர்களில் சுவரொட்டிகள் ஒட்டுதல், கட்-அவுட்கள் வைத்தல், பேனர்கள் மற்றும் தட்டிகள் வைத்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. பொது இடம் என்பது அரசு, அரசுத்துறைக்கு சொந்தமான இடம், உள்ளாட்சி அமைப்புகள், அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களைக் குறிக்கும்.

(ஆ) அரசியல் கட்சிகள் விளம்பரம் செய்வதற்கு ஒரு பொது இடம் தனியாக ஒதுக்கப்பட்டு இருந்தால், மாவட்ட தேர்தல் அலுவலர் தொடர்புடைய நகராட்சி நிர்வாகத்தினர் வழியாக அனைத்து கட்சியினருக்கும் அல்லது வேட்பாளர்களுக்கும் சரிசமமான விளம்பரம் செய்வதற்கான இடத்தை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்நாடு திறந்தவெளி (உரு அழித்தலை தடுத்தல்) சட்டம் 1959.

சட்டம் 1959-ன்படி **பொது இடம்** என்பது சாலை, தெரு, மக்கள் நடக்கும் வழி, மக்கள் கூடுமிடம், ஆகியவற்றை குறிக்கும். இச்சட்டம் நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளுக்குப் பொருந்தும்.

பொது மக்கள் பார்வைக்குரிய பொது இடம் என்பது தனியார் இடமோ தனியார் கட்டிடமோ நினைவு சின்னமோ, சிலையோ, கம்பமோ, சுவரோ, வேலியோ, மரமோ அல்லது இதர பொருள்களோ அல்லது ஒரு நபரின் பார்வையில் படக்கூடிய இடமோ அல்லது ஒருவர் நடந்து செல்லும்போது அவரது பார்வையில் படும்படியான இடமோ இதில் அடங்கும்.

மேலும் இச்சட்டம் ஆட்சேபணைக்குரிய விளம்பரம், போக்குவரத்துக் குழுவின் அனுமதி பெறாத தனியரின் அனுமதி இல்லாத விளம்பரம் மற்றும் உள்ளூரில் போஸ்டர்கள் ஒட்டுவது, தட்டிகள் வைப்பது ஆகியவைகளைப் பற்றி விவரிக்கிறது.

தமிழ்நாடு திறந்தவெளி (உரு அழித்தலை தடுத்தல்) சட்டம் 1959-ன் (1) எந்த நபரும், பார்வைக்குபடும்படியான எந்த இடத்திலும், போஸ்டர்களையோ, துண்டு பிரசுரங்களையோ, அறிவிப்புகளையோ உருவ பொம்மைகளையோ அல்லது வேறுவிதமான அடையாளங்களையோ ஒட்டக்கூடாது.

எந்த ஒருநபரும், தட்டிகள் பொருத்துவதோ, கம்பங்களில் விளம்பர பலகைகள் வைப்பதோ எந்த இடத்திலும், கட்டிடத்திலும், சுவர்களிலும் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ ஆக்கிரமித்து விளம்பரம் செய்யக்கூடாது.

இருப்பினும் பிரிவு-2 செக்ஷன் 4எ தமிழ்நாடு திறந்தவெளி சட்டத்தின்படி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் காவல் ஆணையர்கள் இதர இடங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஏதாவது ஒரு சிறப்பான காரணத்திற்காக தட்டிகள் வைப்பதற்கோ

அல்லது விளம்பரம் செய்வதற்கோ சில நிபந்தனைகளின் பேரில் அனுமதி வழங்கலாம். இந்த அனுமதி ஆணையில் விளம்பரம் செய்யப்படவேண்டிய இடம் காலஅளவு அகியவைகளை குறிப்பிட்டு காட்டவேண்டும்.

உள்ளூர் சட்டம் அமுலில் இல்லாத மாநிலங்களில் இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பின்வரும் வழிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டும்.

1. தனியாருக்கு சொந்தமான இடத்தில் அல்லது கட்டிடத்தில் தனியாரின் அனுமதியுடன் தற்காலிகமான எளிதாக அகற்றப்படக்கூடிய விளம்பரங்கள், கொடிகள், பேனர்கள் ஆகியவற்றை வைக்கலாம். இந்த அனுமதி தனியாரை வற்புறுத்தியோ, பயமுறுத்தியோ பெறக்கூடாது. மேலும் இந்த பேனர்கள், கொடிகள் மற்றவர்களுக்கு இடையூறு அளிக்கும் வண்ணம் இருக்கக்கூடாது. தனியாரிடமிருந்து பெறப்படும் எழுத்துமூலமான புகைப்பட நகலை இந்த விளம்பரங்கள், தட்டிகள், கொடிகள் பேனர்கள் வைப்பதற்கு முன்னதாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

உள்ளூர் சட்டம் இதனை அனுமதிக்கவில்லை என்றாலும் அல்லது எளிதாக அகற்றப்பட முடியாத விளம்பரங்களோ, தட்டிகளோ, பேனர்களோ, கொடிகளோ தனியாரின் அனுமதியின்றியோ அல்லது அனுமதியுடனோ வைக்கக்கூடாது.

தனியார் கட்டிடத்தில் பேனர்கள், தட்டிகள், போஸ்டர்கள் ஒட்டுதல் ஆகியவைகளை தனியாரின் அனுமதியுடன் வைப்பதற்கு உள்ளூர் சட்டம் அனுமதித்து இருந்தாலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிகள் தனியாரிடமிருந்து பெற்ற எழுத்து மூலமான அனுமதி சீட்டின் புகைப்பட நகலை விளம்பரம் செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக தேர்தல் நடத்தும் அலுவலருக்கு விண்ணப்பிக்கவேண்டும். அவரது எழுத்து மூலமான கடிதத்தில் விளம்பரம் செய்யப்படும் இடம், அந்த இடத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி இதற்கு ஏற்படும் செலவு ஆகியவைகளை குறிப்பிடவேண்டும். எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருள்களையோ ஒரு குறிப்பிட்ட இனத்தை துன்புறுத்தும் வார்த்தைகளையோ விளம்பரங்களில் சேர்க்கக்கூடாது. வேட்பாளர்கள் தங்களுக்கு ஓட்டு

சேகரிப்பதற்காக வைக்கப்படும் இது போன்ற விளம்பரங்களுக்காக ஏற்படும் செலவை அவர்களின் தேர்தல் செலவு கணக்கில் சேர்க்கப்படும். ஆனால் ஒரு அரசியல் கட்சியானது எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் விளம்பரங்கள் வெளியிட்டால் அதற்காகும் செலவை வேட்பாளரின் செலவு கணக்கில் சேர்க்கப்படமாட்டாது.

அரசியல் கட்சிகளுக்கோ வேட்பாளருக்கோ அல்லது அவரது முகவருக்கோ மற்றும் அவருக்காக வேலைசெய்யும் வேலை ஆட்களுக்கோ மற்றும் ஆதரவாளர்களுக்கோ சொந்தமான இடம் அல்லது கட்டிடங்கள் இருப்பின் தன்விருப்பத்துடன் எவரது வற்புறுத்தலுக்கும் அல்லது பயமுறுத்தலுக்கும் ஆட்படாமல் தானே முன்வந்து பேனர்கள், தட்டிகள், கொடிகள், கட்-அவுட்டுகள் பிறருக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரித்து விளம்பரம் செய்யாமல் வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு தனிபட்ட வேட்பாளரை ஆதரித்து விளம்பரம் செய்திருப்பின் அது தண்டக்குரிய செயலாக கருதி இந்திய தண்டனை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>அனுமதியற்ற விளம்பரங்களை அழித்தல்</u>**

எந்த ஒரு அரசியல் கட்சியோ, குழுவோ, வேட்பாளரோ, அல்லது தனிநபரோ, உள்ளூர் சட்டத்திட்டங்களை மீறி விளம்பரம் செய்தால் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர் அவைகளை உடனடியாக அகற்றுவதற்கு அறிவிப்பு அனுப்புவார். இந்த அறிவிப்பிற்கு பின்னரும் அரசியல் கட்சியோ வேட்பாளரோ, தனிநபரோ, விளம்பரங்களை அகற்றாவிட்டால் அரசு செலவில் அவைகளை அகற்றி அதற்கான முழு செலவுத் தொகையும் சம்பந்தப்பட்ட கட்சி அல்லது வேட்பாளரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். மேலும் அது தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்கப்படும். இதை தவிர உரிய சட்ட விதிகளின்படி அவர்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>வாகனங்களில் பிரச்சாரம் மற்றும் விளம்பரம் செய்தல்</u>**

மோட்டார் வாகன சட்டத்தின்படி எந்தவொரு தனிநபரும் தான் பயன்படுத்தும் வாகனத்தில் கொடிகளோ, ஸ்டிக்கர்களோ தன் சொந்த விருப்பத்தின்பேரில் பிறருக்கு துன்பம்

விளைவிக்காத வகையில் அல்லது சாலைகளில் செல்வோரின் கவனத்தை ஈர்க்காவகையில் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஓட்டு சேகரிக்கும் வகையில் கொடிகளோ, ஸ்டிக்கர்களோ வாகனங்களில் இருக்கக்கூடாது. ஒரு வேட்பாளருக்கு ஓட்டு சேகரிக்கும் வகையில் தன்னுடைய வாகனத்தில் கொடிகளோ, ஸ்டிக்கர்களோ அந்த வேட்பாளரின் அனுமதியுடன் வைத்திருந்தால் அந்த வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் இச்செலவு சேர்க்கப்படும். அவ்வாறு வேட்பாளரின் அனுமதி இல்லாமல் தனது வாகனத்தில் கொடிகளையோ, ஸ்டிக்கர்களையோ பயன்படுத்தினால் அந்த வாகனத்தின் உரிமையாளர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். வர்த்தக வாகனங்களில் எந்தவொரு அரசியல் கட்சியினரும் கொடியோ, ஸ்டிக்கர்களையோ வைப்பதற்கு அனுமதி இல்லை. ஆனால் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய அனுமதி பெற்று அந்த அனுமதி சீட்டை வாகனத்தின் முன்பக்கத்தில் ஒட்டி வைத்திருந்தால் அரசியல் கட்சியின் கொடிகளையோ, ஸ்டிக்கர்களையோ வைத்துக் கொள்ளலாம்.

எந்தவொரு வாகனத்திலும், ஒலிபெருக்கியை பொருத்தி தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்த விரும்பினால் மோட்டார் வாகன சட்டத்தின்படி உரிய அதிகாரம் பெற்ற அலுவலரிடம் அனுமதி பெற்ற பின்னரே உபயோகிக்க வேண்டும்.

தமிழ்நாடு திறந்தவெளி (உரு அழித்தல் தடுப்பு) திருத்தச் சட்டம் 1994ன்படி எந்தவொரு நபரும் எந்த மோட்டார் வாகனத்திலும் எந்தவொரு போஸ்டரையோ உருவபொம்மையையோ அறிவிப்புகளையோ ஆவணங் களையோ, துண்டுசீட்டுகளையோ வைத்து விளம்பரம் செய்யக்கூடாது.

எந்தவொரு நபரும் மோட்டார் வாகனத்தில் விளம்பர தட்டிகளையோ, விளம்பர அறிவிப்புகளையோ வைத்து விளம்பரம் செய்யக்கூடாது.

ஆனால் மாநில போக்குவரத்து தலைவரின் அதிகாரம் பெற்ற அலுவலரின் அனுமதியுடன் மேற்சொன்னவைகளை தங்களுடைய வாகனங்களில் வைத்து விளம்பரம் செய்யலாம். இந்த அதிகாரம் பெற்ற அலுவலர் விளம்பர தட்டிகளை வாகனங்களில் பொருத்தி விளம்பரம் செய்ய அனுமதி கொடுக்க மறுப்பதற்கு அதிகாரம் உண்டு.

அரசுக்கு சொந்தமான கட்டிடங்களின் சுவர்களில் எழுதுதல், போஸ்டர்களை ஒட்டுதல் ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளதால் அரசுக்கு சொந்தமான வாகனங்களிலும், இவைகளை ஒட்டி விளம்பரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே, விளம்பர போஸ்டர்களை அரசு வாகனங்களிலோ தனியார் வாகனங்களிலோ ஒட்டி விளம்பரம் செய்வது கூடாது.

எனினும், மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்வதற்கு மாநகராட்சி ஆணையரின் அனுமதியும், இதர இடங்களில் சம்மந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளரின் அனுமதியும் பெற்று ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்யலாம். தேர்தல் பிரச்சாரங்களுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தலைமை தேர்தல் ஆணையரிடம் அனுமதி பெற்று பிரச்சாரம் செய்யலாம். இந்த அனுமதி சீட்டை வாகனங்களின் முகப்பில் தெரியுமாறு ஒட்டவேண்டும்.

**இதர பிரச்சார வழிகள்**

உள்ளூர் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு தேர்தல் பிரச்சாரத்திற்கான ஊர்வலங்களில் கொடிகளையோ, பேனர்களையோ, கட்அவுட்களையோ எடுத்துச் செல்லலாம்.

இதுபோன்ற ஊர்வலங்களில் ஊர்வலத்தினர் அரசியல் கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஆதரிக்கும் வண்ணம் தொப்பிகளையோ, முகமூடிகளையோ, துண்டுகளையோ அணிந்துவர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரசியல் கட்சி அல்லது வேட்பாளர் முக்கிய ஆடையான சேலை சட்டை ஆகியவைகளை விநியோகிக்க அனுமதி இல்லை.

அரசுக்கோ தனியாருக்கோ அல்லது அரசு உதவிபெறும் நிறுவனத்திற்கோ சொந்தமான கல்வி நிறுவனங்களை எந்தவித அரசியல் பிரச்சாரத்திற்கோ ஊர்வலத்திற்கோ யாரும் பயன்படுத்தக்கூடாது.

அரசு தேர்தல் துறை கடிதம் எண் 7226/2008-09 நாள் 21.3.2009-ல், வெளியிட்டுள்ள தெளிவுரையின்படி மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளைத் தவிர இதர ஊரகப்பகுதிகளில் தனியாருக்குச் சொந்தமான இடத்திலோ/ கட்டிடத்திலோ கட்டிட உரிமையாளரின் எழுத்து மூலமாகப் பெற்ற சம்மதத்துடன் சுவர் விளம்பரங்கள், போஸ்டர்கள் ஒட்டுதல் மூலம் விளம்பரங்கள் செய்து கொள்ளலாம்.

<u>**தொலைக்காட்சி, கேபிள் சேனல்கள் மற்றும் வானொலி மூலம் அரசியல் விளம்பரம் செய்தல் குறித்து.**</u>

1. தொலைக்காட்சி சேனல்கள், கேபிள் சேனல்கள் மற்றும் வானொலி மூலம் தேர்தல் விளம்பரம் செய்ய உத்தேசித்துள்ள ஒவ்வொரு தேசிய மற்றும் மாநிலத்தில் பதிவு பெற்ற அரசியல் கட்சி மற்றும் அதன் வேட்பாளர்கள் தாங்கள் விளம்பரம் செய்யத் துவங்குவதற்கு குறைந்த பட்சம் 3 நாட்கள் முன்னதாகவே அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

2. பதிவு செய்யாத கட்சிகள் மற்றும் தனி நபர்கள் 7 நாட்கள் முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. ஒளிபரப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் 2 நகல்களை சி.டி. வடிவத்தில் அதன் எழுத்து வடிவத்தை சான்று (அட்டெஸ்ட்) செய்தும் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை பரிசீலிக்கும் போது அதில் நீக்கம் செய்யவும், மாற்றம் செய்யவும் அனுமதி வழங்கும் அலுவலருக்கு அதிகாரம் உள்ளது.

4. விண்ணப்பத்துடன் பின்வரும் விபரங்கள் இணைத்து அளிக்கப்பட வேண்டும்.

அ) விளம்பரம் தயாரிப்பு செலவு.

ஆ) விளம்பரத்தினை தொலைக்காட்சி, கேபிள் டி.வி., அல்லது வானொலி மூலம் ஒளி/ஒலி பரப்ப ஆகும் செலவு.

இ) எத்தனை முறை விளம்பரம் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது? என்பதும், ஒருமுறை விளம்பரம் செய்ய எத்தனை ரூபாய் கட்டணம் என்பதும் விண்ணப்பத்தில் குறிக்கப்பட வேண்டும்.

ஈ) அந்த விளம்பரமானது கட்சியின் மொத்த விளம்பரமா? அல்லது வேட்பாளருக்கான விளம்பரமா? என்பதை குறிக்க வேண்டும்.

உ) கட்சி அரசியல், வேட்பாளர் இல்லாத நபரால் விளம்பரம் செய்ய விரும்பும் பட்சத்தில் அந்த நபர் மேற்படி விளம்பரமானது குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கோ, அல்லது வேட்பாளருக்கோ சாதகமாகும் வகையில் இல்லை என்று உறுதிப்பிரமாணம் அளித்திட வேண்டும்.

மேலும் மேற்படி விளம்பரம் குறிப்பிட்ட கட்சியோ அல்லது வேட்பாளரோ நிதி அளித்து செய்யப்படவில்லை என்று உறுதி அளிக்க வேண்டும்.

ஊ) தொலைக்காட்சி, கேபிள் டி.வி., மற்றும் வானொலி விளம்பரங்கள் குறித்த செலவுகள் அனைத்தும் வங்கி காசோலை மூலமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

## அனுமதி அளித்தல் மற்றும் மேல்முறையீடு

மாநில அளவில் அனுமதி வழங்ககூடிய குழுவிற்கு மாநில இணை தலைமை தேர்தல் அலுவலர் தலைவராகவும், சென்னை மாவட்ட ஆட்சியர் உறுப்பினராகவும், மற்றொரு உறுப்பினராக மத்திய அரசின் செய்தி விளம்பரத் துறையைச் சார்ந்த முதல்நிலை அலுவலர் ஒருவரும் இருப்பார்கள்.

மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தேர்தல் நடத்தும் அலுவலர் விளம்பரங்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரியாக இருப்பார். தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்களுக்கு அனுமதி வழங்குவதிலோ, மறுப்பதிலோ புகார் செய்ய விரும்பினால் அதனை தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி தலைமையிலான குழுவிற்கு அனுப்பி வைக்கலாம்.

0000

## நாடாளுமன்றத் தேர்தல் 2009

## நன்னடத்தை நெறிமுறைகள். (ஆடினநட ஊடினந டிக ஊடினேரஉவ)

## தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய நெறி முறைகள்.

1. வழிபாட்டு தலங்களான கோயில், மசூதி மற்றும் கிறித்துவ தேவாலயங்களில் தேர்தல் குறித்த பிரச்சாரம் மேற்கொள்ளக் கூடாது. வாக்குகள் சேகரிப்பதற்கு மதம் ஒரு தடையல்ல. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களிடத்திலும் வாக்கு சேகரிக்கலாம்.

2. வேட்பு மனு தாக்கல் செய்யும் போது தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் சுற்றளவிற்குள் வேட்பாளர் அதிக பட்சமாக 3 கார்கள்தான் உபயோகப்படுத்தலாம். வேட்பு மனு தாக்கல் செய்ய வேட்பாளரையும் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

3. தேர்தல் பணிக்காக வேட்பாளர் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட அனுமதியின் அசல் நகலை வாகனத்தின் முன் கண்ணாடியில் பார்வையில் படும்படி ஒட்ட வேண்டும். அனுமதியில் வாகனத்தின் எண் மற்றும் எந்த வேட்பாளருக்கு வழங்கப்பட்டதோ அந்த வேட்பாளரின் பெயர் குறிக்க வேண்டும். ஒரு வேட்பாளருக்கு வழங்கப்பட்ட வாகன அனுமதியை வேறு வேட்பாளர் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்தப்பட்டால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 171-**ழ** -ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

4. தேர்தல் நடத்தும் அலுவலரின் அனுமதி பெறாமல் வாகனங்களைப் பயன்படுத்துவது விதிமுறைகளுக்குப் புறம்பாக வேட்பாளர் தேர்தல் பணி மேற்கொள்ளப்பட்டதாக கருதப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

5. சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைக் கருத்தில் கொண்டு அரசியல் கட்சிகள் பிளாஸ்டிக் அல்லது பாலிதீன் கொண்டு விளம்பர சுவரொட்டி மற்றும் பேனர்கள் தயாரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

6. அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் தேர்தல் சம்பந்தப்பட்ட துண்டு பிரசுரம், நோட்டீஸ் எதையும் அரசியல் கட்சிகள் அச்சடிக்கக்கூடாது.

7. வேட்பாளர் சார்பாக வாக்காளருக்கு புடவை, சட்டை போன்ற உடைகளை வழங்கக்கூடாது.

8. தேர்தல் பிரச்சாரம் முடிந்து வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திற்கு இடைப்பட்ட 48 மணி நேரத்தில் வேட்பாளர் தேர்தல் சம்பந்தப்பட்ட விபரங்களை வாக்காளர்களுக்கு திரைப்படம், வீடியோ மூலம் திரையிட்டு ஒளிபரப்பக்கூடாது.

9. வேட்பாளர் தனது படம் அச்சடிக்கப்பட்ட டைரி, காலண்டர் மற்றும் ஸ்டிக்கர்களை வாக்காளர்களுக்கு வழங்கக்கூடாது.

10. தேர்தல் சமயத்தில் கட்சிகள் தற்காலிக அலுவலகங்களை அமைக்கலாம். ஆனால் இவ்வலுவலகங்கள்,

அ) தனியார் மற்றும் அரசு நிலங்களை ஆக்கிரமிக்கக் கூடாது.

ஆ) மத வழிபாட்டு தலங்கள் மற்றும் அதனை ஒட்டி அமைக்கக்

கூடாது.

இ) பள்ளிகள், மருத்துவமனைகளை சுற்றி அமைக்கக் கூடாது.

ஈ) வாக்கு சாவடி எல்லையிலிருந்து 200 மீட்டர் சுற்றளவிற்கு அமைத்தல் கூடாது.

உ) ஒலி பெருக்கிகளை இரவு 10.00 மணிக்கு பிறகும், அதிகாலை 6.00 மணிக்கு முன்பும் பயன்படுத்தக் கூடாது.

ஊ) பொதுக் கூட்டங்கள் இரவு 10.00 மணிக்கு பிறகும், காலை 6.00 மணிக்கு முன்பும் நடத்தக் கூடாது. வாக்குப்பதிவு முடியும் நேரத்திற்கு முன்பு வாக்கு சேகரிப்பு முடிந்த பிறகு, பொதுக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

0000